# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC. 114/2021 | Village | : | |
| Prosecution witness | : | PW- 24 | Taluk | : | |
| Name | : | டாக்டர் திரு. ராகவேந்திரன் | Occupation | : | |
| Father Name | : | திரு. வெங்கடேசலு | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 07.08.2025**

**A1 PT warrant , A2, A3 present.**

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தற்போது அரசு மருத்துவமனை ஒரத்தநாட்டில் உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். இதற்கு திருவையாறு அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது 29.5.2020 அன்று திருவையாறு காவல் ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் கு.எண் 709/2020 ச.பி. 294 பி, 448, 342 இதச உ.இ. 3 (1)PPDL கீழான குற்றத்திற்கு சம்மந்தபட்ட இறந்துபோன ஆண் குணசீலன், த.பெ. கோவிந்தராஜ் வயது 25 என்ற ஆண் நபரை ரமேஷ் குமார் என்கிற காவலர் அடையாளம் காட்ட நான் கூறாய்வு மேற்கொண்டேன். அந்நாரை நான் நோக்கும்போது சுமாரான போஸாக்குடைய நபராக காணபட்டார். அவரை நான்சோதித்து பாக்கும்போது அவருக்கு கீழ்காணும் வெளிப்புற காயங்கள் காணபட்டன

1) கிழிந்த காயம் ஒன்று பின்னந்தலையில் 6X1X1 செமீ அளவில் காணபட்டது

2) இடது காது குறுக்காக வெட்டபட்டிருந்தது. பாதி தொங்கயிபடி இருந்தது.

3) பின்னந்தலையில் மற்றொரு கிழிந்த காயம் 9X1X1 செமீ அளவில் காணபட்டது

4) பின்னந்தலையில் L வடிவில் 11X8X1 செமீ அளவில்காணபட்டது. உள்ளே பார்த்தபோது மண்டைஒடு நொருங்கி எலும்பு முறிவு காணபட்டது. அதன் உள்ளே ஆய்வு செய்தபோது மூளை பின்னந்தலையில் கடுமையாக கிழிந்த காயம் ஏற்பட்டிருந்தது.

சிறுமூளை நைந்து காயமாக இருந்தது. சிறுமூளைக்கு கீழே இருக்கும்பகுதி கடுமையாக சிதைந்த காயம் ஏற்பட்டிருந்தது. சுமார் 150 மிலி மண்டை ஒட்டினுள் உறைந்த இரத்தம் இருந்தது. மண்டை ஒடு எலும்பு பின் மண்டை உடைந்த இடத்தில் பிளந்திருந்தது.

பிண விறைப்பு தன்மை காணபட்டது. கண்கள் மூடியிருந்தது, வாய் பாதி திறந்தநிலையில் இருந்தது. வலது காதிலிருந்து இரத்தம் வடிந்திருந்தது. நெஞ்சுகூடு காயம் எதுமின்றி இருந்தது. இதயத்தில் 100 மிலி உறைந்த இரத்தம் இருந்தது. நுரையீரல் காயம் எதுமின்றி இருந்தது. வயிற்று பகுதி திறந்துபார்த்தபோது 50 மிலி திரவத்துடன் காற்று காணபட்டது. குடல் பகுதியில் அரக்கு நிறத்தில் 50 மிலி திரவம் காணபட்டது. பிறப்புறுப்பிலிருந்து சிறுநீரக கசிவோ, விந்தணு கசிவோ இல்லை. மலவாயில் கசிவு எதுவும் இல்லை. கைகள் மற்றும் கால்களில் எந்தவித காயங்களும் இல்லை. உடல் உறுப்புகள் பத்திரப்படுத்தபட்டு பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டது. பகுப்பாய்வு முடிவில் அதில் எந்தவிதமான மதுவோ வேறு விதமான நச்சுபொருட்களோ காணப்படவில்லை என்ற அறிக்கை கிடைத்தது அதன் அடிப்படையில் மேற்படி நபர் மூளை பகுதியில் அடிபட்டு கடுமையாக பாதிக்கபட்டதால் இறந்திருக்ககூடும் என்று சான்று வழங்கினேன் அந்த சான்று **அ.சா.ஆ. 12** ஆகும் போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.